ஏப்ரல் – ஜுன் (2025)

# கடந்து வந்த பாதை

மின்னிதழ்

جماعت اسلامی ہند

WWW.JIHTN.ORG

## மண்ணில் கைகள்..! இந்தியாவில் இதயங்கள்..!

நாடு தழுவிய பரப்புரை

CIO
Children Islamic Organisation






ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்
தமிழ்நாடு - புதுச்சேரி

# ஈகைத் திருநாள் சங்கமம் - வாணியம்பாடி

வாணியம்பாடி ஒருங்கிணைந்த கூட்டமைப்பின் சார்பாக, புனித ரமலான் மாத முடிவில் ஈகைத் திருநாள் மகிழ்ச்சித் தருணங்கள் ஹிந்து, கிறித்தவ மற்றும் முஸ்லிம் மக்கள் ஒரு இடத்தில் கலந்து கொண்டு கொண்டாடப்பட்டது... இந்த நிகழ்ச்சிக்கு திருப்பத்தூர் மாவட்டம் அரசு ஷரீஅத் காஜி மௌலவி அப்துல் ரஹ்மான் மாதினி தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார், முக்கிய விருந்தினராக எழுத்தாளர் இயக்குனர் திரு. ஸ்ரீ ராம் சர்மா சிறப்புரை ஆற்றினார், பிறகு "சமரசம்" இதழ் பொறுப்பாசிரியர் திரு. வி. எஸ். முஹம்மத் அமீன் வினோத முறையில் முஸ்லிம்களின் உதவி செய்யும் குணங்கள் பற்றி சிறப்புரை ஆற்றினார், இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ ராம் ஷர்மா அவர்களின் படைப்பு "கதீஜா (ர.அ) ஒரு உயர் நுண்மதிவாள பெண்மணி" உருது மொழியாக்கம் செய்யப்பட்ட நூல் வெளியீடப்பட்டது... இறுதியில் ஜனாப் நரி முஹம்மது நயீம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.





# பன்மத ஒற்றுமையின் வெளிப்பாடு: ஈத் மிலன் பெருநாள் சந்திப்பு

கும்பகோணம் காமராஜர் ரோட்டில் அமைந்துள்ள தூய அலங்கார அன்னை பேராலய வளாகத்தில் நேற்று (06.04.2025) மாலை 6:30 மணிக்கு ஈத்மிலன் பெருநாள் சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது. கும்பகோணம் இஸ்லாமிக் சோசியல் வெல்பர் அசோசியேஷன் (கிஸ்வா) மற்றும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வுக்கு கிஸ்வா தலைவர் ஹாஜி P.S. யூசுப், அல் அமீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் ஹாஜி இன்ஜினியர் M.N. முகமது ரஃபி, சீமாட்டி குழும உரிமையாளர் ஹாஜி ஜியாவுதீன், குறிஞ்சி மெட்ரோ குழுமத் தலைவர் ஹாஜி பிர்தோஸ் கான் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஹாஜி எம். அப்துல் கலாம் ஆசாத் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்ச்சியை ஜனாப் ஹாஜா மாலிக் மற்றும் ஜனாப் அன்சார் அலி ஆகியோர் தொகுத்து வழங்கினர். ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஹாஜி எம். அப்துல் கலாம் ஆசாத் வரவேற்புரை நல்கினார். ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாவட்ட அமைப்பாளர் ஜனாப் எம். முகமது யூனுஸ், "பன்முகம் கொண்ட நாடு இந்தியா. ஆன்மிகம் தான் இந்த நாட்டின் அடையாளம்" என்று குறிப்பிட்டார். அல் அமீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் ஹாஜி முகமது ரஃபி, "ரமளான் மாதம் மனிதநேயத்தைப் போற்றும் மாதம். இந்த ஈதுமிலன் பெருநாள் சந்திப்பு மகிழ்ச்சியான நிகழ்வாக உள்ளது" என்று கூறினார். தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமிகள் (ஆதீன குரு, திலகவதியார் திருவருள் ஆதீனம், புதுக்கோட்டை):"அனைத்து



சமயத்தினருடனும் அன்புடன் இணைந்து வாழ வேண்டும். ஒரே மதம் கொண்ட நாடுகள்கூட பிரச்சினைகளை சந்திக்கின்றன. இஸ்லாத்தை எடுத்துக்கொண்டால், அது அமைதியின் மார்க்கம்'' என்று தெரிவித்தார். மேதகு ஆயர் ஜீவானந்தம் அமலநாதன் (கும்பகோணம் மறைமாவட்டம்): ''அனைத்து மதங்களும் கடவுளை ஒரே வழியில் தேடுகின்றன. தண்ணீரைப் போல, பெயர்கள் மாறினும் சாரம் ஒன்றே. இதுபோன்ற நிகழ்வுகள் அதிகமாக நடைபெற வேண்டும். உரிமைகளுக்காக அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும்'' என்று கூறினார். மௌலானா மௌலவி எம். முகமது இஸ்மாயில் இம்தாதி★ (ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் செயலாளர், மனித வள மேம்பாட்டுத் துறை): ''ஈதுமிலன் நிகழ்ச்சி தேசிய அளவில் கொண்டாடப்பட வேண்டும்'' என்று கூறிய அவர், பின்வரும் ஐந்து கருத்துகளை முன்வைத்தார்:

1. எல்லா மதங்களையும் மதிக்க வேண்டும்.
2. கருத்துக்களை பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.
3. குறைகளைக் கூறாமல் மன்னிக்கும் பண்பு வளர வேண்டும்.
4. தவறான எண்ணங்களைக் கொள்ளக்கூடாது.
5. ஆன்மிகத்தைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது.

''இஸ்லாம் அமைதியின் மார்க்கம்'' என்று அவர் வலியுறுத்தினார். நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு புத்தகங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. கிஸ்வா செயலாளர் ஜனாப் எஸ். ஜாகிர் உசேன் நன்றி உரை நல்கினார். 350க்கும் மேற்பட்ட சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு, பல்மத ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கான ஒரு முன்மாதிரியாக அமைந்தது. ஈதுமிலன் போன்ற நிகழ்வுகள் மூலம் சமூகத்தில் அமைதி மற்றும் ஒற்றுமை வலுப்படுத்தப்படும் என்பதே பங்கேற்ற அனைவரின் நம்பிக்கை.

# இதயங்களை இணைக்கும் பெருநாள் சந்திப்பு (ஈத் மிலன்) நிகழ்ச்சி - அதிராம்பட்டினம்.

இறையருளால் கடந்த 06/04/25 (ஞாயிற்றுக்கிழமை) அன்று தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) மற்றும் இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு (SIO) சார்பாக ''இதயங்களை இணைக்கும் பெருநாள் சந்திப்பு'' (ஈத் மிலன்) நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் SIOவின் முன்னாள் மாநில ஆலோசனைக்குழு உறுப்பினர் ஜனாப் குடந்தை ஃபக்ருதீன் அலி அஹமத் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

ஈகைப் பெருநாள் என்றால் என்ன? முஸ்லிம்கள் ஏன் பெருநாள் கொண்டாடுகின்றனர். அந்த நாளில் அவர்கள் செய்யும் பணிகள் என்ன என்பது குறித்து விளக்கினார். மேலும் நாடு தற்போது இருக்கும் சூழலில் பன்சமூகங்களுக்கு மத்தியிலான நல்லிணக்கம், சகோதரத்துவம், அன்பு இவைகளின் முக்கியத்துவத்தை குறித்தும் வலியுறுத்தினார். உரைக்கு பிறகு கலந்துரையாடல் மற்றும் கேள்வி பதில் நிகழ்வு நடந்தது. இறுதியாக



வந்திருந்த அனைவருக்கும் இரவு விருந்து (பிரியாணி) பரிமாறப்பட்டது. இந்த நிகழ்வில் அதிராம்பட்டினம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து முஸ்லிமல்லாத 45 சகோதரர்கள் உட்பட சுமார் 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# திராவிட கழக தோழர்களுடன் ஒரு சந்திப்பு

மணப்பாறை தக்வா பள்ளிவாசல் கிளையில் கடந்த 8 3 2025 செவ்வாய் அன்று திராவிட கழகத் தோழர்கள் வருகை தந்து தங்களுக்குள் ஒருங்கிணைப்பு குழு ஏற்படுத்திக் கொண்டு தோழர் மதிவதனி கூட்டம் வரும் மே மாதத்தில் நடந்த ஆதரவு கேட்டும் நம்முடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோளும் வைத்தனர். நமது தரப்பில் மாதம் ஒருமுறை பொதுவாக உள்ள பிரச்சனைகள் சமூக நீதி, சகோதரத்துவம் ஒழுக்கம் சார்ந்த முரண்படாத கருத்துக்களை தளம் அமைத்து கலந்துரையாடல் நடத்துவது என்று முடிவு முடிவு செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட தலைவர் ஆரோக்கியராஜ் திருச்சி மாவட்ட செயலாளர் மகாமுனி மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் சங்கிலி முத்து கனகராஜ் துணைச் செயலாளர் ராஜசேகரன் மணப்பாறை திராவிட நகர தலைவர் கிம்ஸ் ரமேஷ் வையம்பட்டி சக்திவேல் மணப்பாறை பகுத்தறிவாளர்கள் துரை அழகிரி அரசு வழக்கறிஞர்,தோழர் துரை காசிநாதன் திமுக மாநில பேச்சாளர்,கவிஞர் பசுலுதின்,மணிவண்ணன் ஆகியோர் அமர்ந்து கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அவர்களுக்கு சமரசம் இதழ் அறிமுகப்படுத்தப்பட்டது மேலும் டாக்டர் KVS அவர்களின் அறிவோம் ஹிஜாப் புத்தகங்கள் அனைவருக்கும் நினைவு பரிசாக வழங்கப்பட்டன.



# ஈகை திருநாள் சந்திப்பு நிகழ்ச்சி

மணப்பாறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 06-0402025 மாலை 7 மணி அளவில் மணப்பாறையில் உள்ள தக்வா பள்ளியில் சிறப்பாக நடந்தது நிகழ்ச்சியின் துவக்கமாக திருக்குர்ஆன் வசனங்கள் ஓதப்பட்டு மணப்பாறை அமீரே மக்காமி ஜனாப் ஜபருல்லா வரவேற்புடன் திருச்சி மண்டல பொறுப்பாளர் ஜனாப் சையத் முஹமது அவர்களின் தலைமை உரையுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களான மணப்பாறை நகர்மன்ற தலைவர் திரு கீதா மைக்கேல்ராஜ் மணப்பாறை லூர்து மாதா அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தையும் மறை மாவட்ட முதல்வருமான அருட்திரு தாமஸ் ஞானத் துறை அவர்களும் மணப்பாறை வேப்பிலை ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் அறங்காவலர் மதிமுக திருச்சி மாவட்ட செயலாளர் தமிழ் மாணிக்கம்






மற்றும் அதிமுக நகரச் செயலாளர் பவுன் ராமமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு ஜமாஅத்தே இஸ்லாமிக் ஹிந்தின் மாநில செயலாளர் ஜனாப் சிக்கந்தர் ஈகை திருநாள் சிறப்பு பற்றியும் ஈகை என்ற பண்பு அல்லாஹ்வால் மனித குலத்துக்கு வழங்கப்பட்ட ஒரு அருட்கொடை என்றும் நோன்பின் மூலமாக இறைவன் தன் அடியார்களுக்கு தரும் பயிற்சிகள் என்பதையும் பட்டியலிட்டு அழகான விளக்கம் தந்தார்கள் இறுதியாக சகோதரர் காதர் பாட்ஷா நன்றி கூறி இனிதே நிகழ்ச்சி விருந்துடன் முடிவடைந்தது சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகள் 65 பேர்களும் கலந்து கொண்டார்கள்.

# சந்திப்பு

வக்ஃபு திருத்த மசோதாவை எதிர்த்து மக்களவையில் கண்டன உரையாற்றிய திமுக துணை பொதுச்செயலாளர் மக்களை உறுப்பினர் ஆ. இராசா அவர்களை ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில செயலாளர் SN. சிக்கந்தர் சமரசம் பொறுப்பாசிரியர் வி எஸ் முகமது அமீன் ஆகியோர் சென்னையில் அவரது இல்லத்தில் சந்தித்து பேசினர். ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழகத்தின் சார்பாக நன்றி கடிதத்தையும் அளித்தனர். சமரசம் இதழ்களும் IFT நூல்களும் வழங்கப்பட்டன.

# பல்சமய உரையாடல் மன்றம்




புனித ஜான்பால் பல்சமய உரையாடல் மன்றம் சார்பில் திருந்தந்தை பிரான்சிஸ் போப் அவர்களின் மறைவிற்காக நடந்த நினைவுக் கூட்டத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், திருச்சி அமீரே மக்காமி முனைவர் ஹஜ் மொய்தீன் அவர்கள் கலந்து கொண்டு போப் பிரான்சிஸ் அவர்களின் நற்பண்புகள், மக்கள் சேவைப் பணிகள், சமூக நல்லிணக்க முயற்சிகள் ஆகியவற்றை நினைவு கூர்ந்து பேசினார். இந்நிகழ்வில் ஜனாப். நவாஸ் கான், சகோ. உமர் பாரூக், அஸ்ஸலாம் கல்லூரி துணை முதல்வர் மௌலவி. மொய்தீன் ஃபைஜி மற்றும் அஸ்ஸலாம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# மணப்பாறை ஜமாஅத்தே இஸ்லாமிக் ஹிந்த் கிளையின் சார்பாக கோடைகால பயிற்சி வகுப்புகள்

எல்லாம் வல்ல இறைவன் அருளால் 05.05. 2025 வெள்ளிக்கிழமை அன்று சுமார் பத்து நாட்களாக நடைபெற்ற கோடைகால பயிற்சி வகுப்புகளில் பங்கு பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் விதமாக அவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையில் சாலிடாரிட்டி அமைப்பின் தலைவர் கமால் கலந்து கொண்டு சிறப்பு குத்பா உரையாற்றினார். ஜும்மா தொழுகைக்குப் பிறகு கிளையின் தலைவர் ஜபருல்லா மற்றும் சாலிடாரிட்டி அமைப்பின் மாநில தலைவர்



மற்றும் மணப்பாறை ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவர் முகமது அனிபா கலந்துகொண்டு கோடைகால பயிற்சி வகுப்பிற்கு வருகை தந்த மாணவர்களுக்கு பரிசு பொருட்களை வழங்கியும் அங்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கியும் கௌரவித்தனர். சுமார் 30 மாணவர்கள் தொடர்ச்சியாக கோடைகால பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு இஸ்லாத்தைப் பற்றி மென்மேலும் அறிந்து கொண்டனர்.

# அகில இந்திய முஸலிம் தனிநபர் சட்ட வாரியத்தின் தமிழ்நாடு மாநில உறுப்பினர்கள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டம்.

அகில இந்திய முஸலிம் தனிநபர் சட்ட வாரியத்தின் தமிழ்நாடு மாநில உறுப்பினர்கள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டம் இன்று (4.5.2025 ஞாயிறு) சென்னை ஹஜ் ஹவுசில் நடைபெற்றது. வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிரான நாடு தழுவிய பரப்புரையின் கன்வீனர் SQR இல்யாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி ஹனீஃபா மன்பயீ, துணைத் தலைவர் T. யூசுப் பாஷா, செயலாளர்கள் SN சிக்கந்தர், K.ஜலாலுத்தீன், A.ஃபாத்திமா ஜலால், மத்திய பிரதிநிதிகள் ஃபாகிரா, ராபியா பசரி ஆகியோர் கலந்துகொண்டனர்.



# ஹஜ் வழிகாட்டுதல் முகாம் - 2025

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், கோவை பெருநகரத்தின் சார்பாக இந்த வருடம் ஹஜ் புனித யாத்திரை செல்பவர்களுக்கான, ஹஜ் வழிகாட்டுதல் முகாம் இன்று (08 மே 2025) காலை 9.30 மணி முதல் NSK மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடக்கமாக ஜமாஅத் கோவை பெருநகரத் தலைவர் ஜனாப். P.S. உமர் ஃபாரூக் அவர்கள் தலைமையுரையாற்றினார்.




“கடந்த 12 ஆண்டுகளாக ஜமாஅத் கோவை சார்பாக ஹஜ் வழிகாட்டுதல் முகாம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாமின் முக்கியமான நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியை நாடி ஹஜ் செய்ய செல்ல உங்களுக்கு சரியான வழிகாட்டுதல் வழங்க வேண்டும் என்பதும்,



ஜமாஅத்தின் இஸ்லாமிய, சமூகப் பணிகளுக்கு உங்களுடைய பிரார்த்தனையும் வேண்டிதான்" என்று தனது தலைமையுரையில் தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஜமாஅத் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மௌலவி. முஹம்மது ஹனீஃபா மன்பஈ அவர்கள் "ஹஜ்ஜின் உயிரோட்டம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து அகண்ட திரையில் - PPT Presentation மூலமாக வீடியோ வடிவிலும் முழுமையான ஹஜ் புனித யாத்திரை குறித்தான விளக்கத்துடன் கூடிய வகுப்பினை மௌலவி. முஹம்மது இஸ்மாயில் இம்தாதி சாஹிப் அவர்கள் நடத்தினார்கள். ஹஜ் புனித யாத்திரையின் வரலாற்று சம்பவங்களை நினைவூட்டிய போது ஹாஜி பெருமக்கள் கண்ணீரோடு தியாக வரலாறுகளை நினைவுகூர்ந்தனர். மாலை 5 மணி வரை நடைபெற்ற வழிகாட்டுதல் நிகழ்வில் அனைத்து ஹாஜிகளும் முழுமையாக பங்குபெற்று தங்களுடைய சந்தேகங்களையும் நிவர்த்தி செய்யும் வண்ணம் கலந்துரையாடி முழுமையாக பங்கு பெற்றனர். நிகழ்வில் 300 க்கும் மேற்பட்ட ஹாஜிகள் கலந்து கொண்டனர்.

## "அஸ்ஸபீலுல் ஹுதா (السبيل الهدى)" I வழிகாட்டும் பாதை - ஆன்லைன் இஸ்லாமிய வாராந்திர வகுப்புகள்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், கோவை பெருநகரத்தின் சார்பாக ஒவ்வொரு வாரமும் இஸ்லாமிய அறிவின் ஒளியினை உங்கள் உள்ளத்தில் பரப்பிட ஒரு அழைக்கின்ற ஒலியாக ஆன்லைனில் இஸ்லாமிய வாராந்திர வகுப்புகள் "அஸ்ஸபீலுல் ஹுதா (السبيل الهدى) – வழிகாட்டும் பாதை" என்ற தலைப்பில் நடைபெற இருக்கிறது. அதனுடைய இலட்சினையை இன்று (மே 8 2025) NSK மண்டபத்தில் வைத்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மௌலவி. முஹம்மது ஹனீஃபா மன்பஈ அவர்கள் வெளியிட, ஜமாஅத்தின் மாநில அமைப்புச் செயலாளர் ஜனாப். K. ஜலாலுதீன் சாஹிப் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

உடன் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், கோவை பெருநகரத் தலைவர் ஜனாப். P.S. உமர் பாரூக் சாஹிப் அவர்களும், மனித மேம்பாட்டுத் துறைச் செயலாளர்




மௌலவி. முஹம்மது இஸ்மாயில் இம்தாதி அவர்களும் உடனிருந்தனர். ஆன்லைன் இஸ்லாமிய வாராந்திர வகுப்புகளில் தொடர் இஸ்லாமிய உரைகள், கேள்வி பதில் நிகழ்வுகள், வரலாற்று உரைகள் போன்றவை ஒவ்வொரு வாரமும் நடைபெற இருக்கிறது. இன்ஷா அல்லாஹ். "அஸ்ஸபீலுல் ஹுதா (السبيل الهدى) – வழிகாட்டும் பாதை" யின் முதல் வகுப்பு வருகின்ற மே 16 2025 – வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணி முதல் 9.45 மணி வரை நடைபெற

இருக்கிறது. இவ்வகுப்புகளில் தங்களையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் https://chat.whatsapp.com/FBZIh36CXiL6mJaGRjbFAF என்ற லிங்கினை பயன்படுத்தி ஆன்லைன் வாராந்திர வகுப்பின் வாட்ஸ்அப் குழுவில் இணைந்திடுங்கள்.

## கோடைகால இஸ்லாமிய வகுப்பு திருப்பூர்

கோடைகால இஸ்லாமிய வகுப்பு திருப்பூர் இஸ்லாமிய மாணவியர் அமைப்பின்(GIO) சார்பாக 28/4/25 முதல் 10/5/25 வரை கோடைகால இஸ்லாமிய வகுப்பு திருப்பூர் மாநகரில் நடத்தப்பட்டது. இதில் 8 ஆம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு மாணவியர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு நாள்களும் நபிமார்களின் வரலாறு, ஆளுமை வளர்ப்பு பயிற்சி, இஸ்லாமிய கேள்வி பதில்கள், சிந்தனைத் தூண்டும் விளையாட்டுகள், பல்வேறு விதமான வகுப்புகள் என நடத்தப்பட்டன. கோடைகால இஸ்லாமிய வகுப்பின் இறுதி நாளான 13 ஆம் நாள் மாணவியர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவ்வகுப்பில் 32 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.




## மணப்பாறை திராவிடர் கழக பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு புத்தகங்கள் பரிசளிக்கும் நிகழ்வு புத்தகங்கள் பரிசளிக்கும் நிகழ்வு

மே 1 2025 மணப்பாறை பகுதியில் திராவிடர் கழகம் மற்றும் பகுத்தறிவாளர் கழகம் சார்பில் மே தின பொதுக்கூட்டம் மணப்பாறை பேருந்து நிலையம் தந்தை பெரியார் சிலை அருகில் நடைபெற்றது. விழாவில் சிறப்புரையாற்ற திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் தோழியர் மதிவதனி அவர்கள் கலந்து கொண்டார்கள்.பொதுக்கூட்டத்தில் ஒன்றிய அரசின் வக்பு திருத்த சட்டத்தை எதிர்த்தும் மேலும் சிறுபான்மையினர் நலன்களின் பாதுகாப்பு குறித்து மேலும் சிறுபான்மையினர் சுரண்டப்படுவதை குறித்தும் மதிவதனி அவர்கள் பேசினார்கள். விழாவில் மணப்பாறை பகுதியை சார்ந்த ஜமா அத்தே இஸ்லாமிக்ஹிந்த் மணப்பாறை கிளையின் தலைவர் ஜபருல்லா செயலாளர் காதர் பாட்ஷா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் பதிப்பித்த புத்தகங்களை விழாவின் விருந்தினர்களுக்கு வழங்கினார்கள். பொதுக் கூட்டத்திற்கு மணப்பாறை பகுதியைச் சார்ந்த அனைத்துக் கட்சியைச் சார்ந்த மற்றும் கட்சி சாரா முக்கிய நபர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். மணப்பாறை மக்களுக்கு இடையேயான இணக்கமான உறவுகளும் மேலும் மணப்பாறை பகுதியிலான ஆளுமைகளுடன் உறவு மேம்படுத்துவது



குறித்தும் விழாவில் சிறப்பு முயற்சி எடுக்கப்பட்டது. பொதுக் கூட்டமானது இரவு ஒன்பது முப்பது மணி அளவில் எல்லாம் வல்ல இறை அருளால் இனிதே நிறைவுற்றது.

## சமய நல்லிணக்க தண்ணீர் பந்தல்



மே 11 2025 மணப்பாறை பகுதியில் வேப்பிலை மாரியம்மன் கோவிலில் பால்குட திருவிழா நடைபெற்றது. திருவிழாவில் பங்குபெறும் பக்தர்களுக்கு நீர்மோர் மற்றும் குளிர்பானம் வழங்குவதற்காக மணப்பாறை ஜமா அத்தே இஸ்லாமிக் ஹிந்த் கிளை மற்றும் மணப்பாறை ஜும்மா பெரிய பள்ளிவாசல் சார்பாக நீர்மோர் மற்றும் குளிர்பானம் வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டார்கள். மணப்பாறை கோவில்பட்டிரோடு பகுதியில் மணப்பாறை ஜமா அத்தே இஸ்லாமிக் ஹிந்த் கிளையின் தலைவர் ஜபருல்லா செயலாளர் காதர் பாஷா மற்றும் கிளையின் உறுப்பினர்கள் உதவியுடன் பந்தல் அமைத்து நீர் மோர் மற்றும் குளிர்பானம் வழங்கப்பட்டது. திருவிழாவில் மணப்பாறை பகுதியை சேர்ந்த பக்தர்கள் பால்குடம் எடுத்து மாரியம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் அமைக்கப்பட்ட பந்தலில் நீர்மோர் மற்றும் குளிர்பானங்களை பருகினார்கள். திருவிழா கமிட்டியின் சார்பாக ஜமாத்அத்தே இஸ்லாமிக் ஹிந்த் மணப்பாறை கிளைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சகோதர சமய சொந்தங்களை சார்ந்த பெரும்பாலான மக்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஆதரவு தெரிவித்ததோடு உளமாற பாராட்டினார்கள் மேலும் இந்த நிகழ்வானது தினத்தந்தி நாளிதழில் செய்தியாக வெளிவந்தது. மக்களின் கருத்தை இஸ்லாத்திற்கு ஆதரவாக மாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. காலை சுமார் 4 மணி அளவில் தொடங்கிய இந்த விழாவானது சுமார் 10 மணி அளவில் நிறைவுற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தாகம் தீர்ப்பது மிகச்சிறந்த அறச்செயல் எனும் தலைப்பில் அமைக்கப்பட்ட இந்த தண்ணீர் பந்தலில் தாகம் தணித்து மகிழ்வுற்றனர்.

## சுற்றுலா மற்றும் கல்வி நிகழ்ச்சி

முதல் நாள் பயணம் (12-05-2025)கும்பகோணம் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் கிளையின் சார்பாக, கிளைத் தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்களின் தலைமையில் 20 உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் கேரள மாநிலத்தின் தேக்கடி சுற்றுலாவிற்குப் புறப்பட்டனர். ஜமாத்தின் வழிகாட்டுதலின்படி இப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாலை 4:00 மணியளவில் பயணத் துவா ஓதப்பட்டு, பயணம் தொடங்கியது.



திருச்சியை அடுத்து இனாம் குளத்தூர் பைபாஸில் உள்ள பள்ளிவாசலில் லுகர் மற்றும் அஸர் தொழுகைகளை நிறைவேற்றினோம். பின்னர் திண்டுக்கல் 8:10 மணியளவில் சென்றடைந்தோம். அங்குள்ள பள்ளிவாசலில் மகரிப் மற்றும் இஷா

தொழுகைகளைத் தொழுதுவிட்டு, இரவு உணவு கொண்டோம். பின்னர் நேரடியாக தேக்கடி நோக்கிப் பயணித்தோம். 12:30 மணியளவில் ஹோட்டலில் வந்து சேர்ந்தோம்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் (13-05-2025)
காலை 5:15 மணியளவில் பஜர் தொழுகைக்கு எழுந்து, தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றினோம். பின்னர் கிளைத் தலைவர் அப்துல் கலாம் ஆசாத் அவர்களால் நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது. காலை 6:00 மணியளவில் கிராத் ஓதி நிகழ்ச்சி துவங்கியது.

முதல் உரை: அய்யம்பேட்டை முகமது நாசர் புகாரி அவர்கள் "உள்ளங்களைத் தூய்மை செய்வோம்" என்ற தலைப்பில் உரையாற்றினார். குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் அடிப்படையில் தூய்மையின் முக்கியத்துவம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறைகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

இரண்டாம் உரை: கிளைத் தலைவர் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் "இறைவனின் அன்பைப் பெறுவது எப்படி?" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். கலந்துரையாடல்: மாவட்ட அமைப்பாளர் ஜனாப் முகமது யூனுஸ் அவர்களின் தலைமையில் "அமைப்பைக் கொண்டு செல்வது எப்படி?" என்ற கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் நான்கு பேச்சாளர்கள் பங்கேற்றனர்: ஜனாப் சாதிக் பாட்ஷா - "பெண்களிடத்தில் அமைப்பைக் கொண்டு செல்வது எப்படி?" ஜனாப் சு. அப்துர் ரஹ்மான் - "இளைஞர்களிடத்தில் அமைப்பைக் கொண்டு செல்வது எப்படி?" ஜனாப் ரிபாயுதின் - "மாணவர்களிடத்தில் அமைப்பைக் கொண்டு செல்வது எப்படி?" ஜனாப் ஹாஜா மாலிக் - "பிரமுகர்களிடத்தில் அமைப்பைக் கொண்டு செல்வது எப்படி?" நிகழ்ச்சிக்கு இடையில் தேநீர் வழங்கப்பட்டது. காலை 8:00 மணியளவில் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. பின்னர் ஸ்விம்மிங் குளத்தில் சிறிது நேரம் பொழுது போக்கினோம். 8:30 மணியளவில் காலை உணவு கொண்டோம். ஜீப் சஃபாரி: 9:30 மணியளவில் ஜீப் சஃபாரி நடந்தது. இயற்கையின் அழகைக் கண்டு மகிழ்ந்தோம். திரும்பும் வழியில் தேக்கடி பெரிய பள்ளிவாசலில் லுகர் மற்றும் அஸர் தொழுகைகளை நிறைவேற்றினோம். பின்னர் ஹோட்டலில் உணவு கொண்டு, சிறிது ஓய்வெடுத்தோம்.

மாலை நிகழ்ச்சிகள்:
3:30 மணியளவில் ரோஸ் பார்க்கில் சுற்றிப் பார்த்தோம். 5:30 மணியளவில் கேரளாவின் சிறப்பு களரிக் கலை நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்தோம். 7:00 மணியளவில் ஹோட்டலுக்குத் திரும்பும் வழியில் தேக்கடி பெரிய பள்ளிவாசலில் மகரிப் மற்றும் இஷா தொழுகைகளைத் தொழுதோம். இரவு உணவு கொண்டு உறங்கினோம்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் (14-05-2025)
காலை 5:15 மணியளவில் பஜர் தொழுகை நிறைவேற்றினோம். பின்னர் கிராத் ஓதி நிகழ்ச்சி தொடங்கியது. முதல் உரை: கிளைத் தலைவர் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் "சேர்ந்திருப்பதும் அல்லாஹ்வின் உதவியும்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.
இரண்டாம் உரை: அய்யம்பேட்டை முகமது நாசர் புகாரி அவர்கள் "இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிகள்" பற்றி விளக்கினார். சிறப்பு உரை: கோயமுத்தூரிலிருந்து வந்த மௌலானா முஹம்மது இஸ்மாயில் இம்தாதி (ஜமாஅத் இஸ்லாமி ஹிந்த், மனித வள மேம்பாட்டுத் துறை) அவர்கள் "நம் குடும்பங்களில்



இஸ்லாமும் இயக்கமும்" என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார். இஸ்லாமிய குடும்பங்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து மார்க்க அடிப்படையில் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தினார். 8:30 மணியளவில் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. 8:45 மணியளவில் காலை உணவு கொண்டோம். போட்டிங்: 9:00 மணியளவில் போட்டிங் பயணம் தொடங்கியது. இயற்கையின் அழகைக் கண்டு மகிழ்ந்தோம். திரும்பும் வழியில் லுகர் மற்றும் அஸர் தொழுகைகளை நிறைவேற்றினோம். சிறியளவு ஷாப்பிங் செய்துவிட்டு, 4:00 மணியளவில் கும்பகோணத்திற்குப் புறப்பட்டோம். 12:30 மணியளவில் பாதுகாப்பாக கும்பகோணம் வந்து சேர்ந்தோம். முடிவுரை இந்த சுற்றுலா மற்றும் கல்வி நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திய அல்லாஹ்வுக்கு எல்லாப் புகழும். கிளைத் தலைவர் அப்துல் கலாம் ஆசாத் அவர்களின் தலைமையிலும், ஹாஜா மாலிக் உள்ளிட்ட அனைவரின் ஒத்துழைப்பிலும் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் நன்றி!

## கடையநல்லூர் கோடைக்கால இஸ்லாமிய வகுப்பின் நிறைவு விழா




கடையநல்லூர் JIH கிளை சார்பாக கோடைக்கால இஸ்லாமிய வகுப்பின் நிறைவு விழா.. இன்று 21/11/1446 (20/05/2025) செவ்வாய் கிழமை.ஹிதாயத்துல் இஸ்லாம் மேல்நிலை பள்ளியில் வைத்து மகளிர் வட்டப் பொருப்பாளர் சகோதரி ஜுவைரியா தலைமையில் நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ். முதல் அமர்வு.. காலை 10:30 மணிக்கு துவங்கியது. ஆரம்பமாக C I O மாணவி இறைவசனம் ஓதினார். கிளைத் தலைவர் k. பீர் முஹம்மது துவக்கவரை நிகழ்த்தினார். சகோதரி:மும்தாஜ். (அசிரியை ஓய்வு) அலைபேசியினால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகள் குறித்து சிற்றுரை நிகழ்த்தினார். மாணவ மாணவிகள் கற்ற கல்வியின் வாயிலாக தங்களின் ஆளுமைகளை வெளிப்படுத்தினார்கள். ஹிதாயத்துல் இஸ்லாம் பள்ளிக் குழுமம் தாளாளர் ஜனாப் A G செய்யது முஹைதீன் அவர்கள் பரிசுகள் வழங்கி வாழ்த்தினார். ஜமாத் ஊழியர் சகோதரி பானு நன்றியுரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியை ஜமாஅத் ஊழியர் சகோதரி.நாகூர் பானு. சிறப்பாக வழிநடத்தினார்.



இரண்டாம் அமர்வு மதியம் 2:30 மணிக்கு துவங்கியது. ஹாஃபிழா வாஃபிகா இறைவசனம் ஓதி துவக்கினார்கள், கோடைக்கால பயிற்சி வகுப்பின் நோக்கம் குறித்து கிளைத் தலைவர் பீர் முஹம்மது உரை நிகழ்த்தினார். மாணவிகள் திறனாய்வு போட்டியில்

பங்கு கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினார்கள். சிறப்பு அழைப்பாளராக Dr.ரஜியா MDS பிஸ்மி, ஆசிரியை ஹிதாயத்துல் இஸ்லாம் மேல்நிலைப்பள்ளி. இருவரும் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்கள். ஜமாஅத் ஊழியர்கள் ஹாஃபிழா ஜுனைதா. அவர்கள் நிறைவுரை நிகழ்த்தினார். G I O பொறுப்பாளர் சகோதரி நஸீகா அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியை சகோதரி செய்யத் அலி பாத்திமா சிறப்பாக வழிநடத்தினார்.

# கலந்துரையாடல் நிகழ்ச்சி



மே 21,2025, திருச்சி சத்தியச்சோலையில் வக்ஃப் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த நண்பர்கள் பலரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். துவக்கமாக Er.K.ஜலாலுதீன் திருமறை வசனங்களை ஓதினார். பேரா. அமானுல்லா வந்தவர்களை வரவேற்று சத்தியசோலையை அறிமுகப்படுத்தினார். முனைவர்.ஹஜ் மொஹிதீன் அவர்கள் இந்த கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கி சிறப்புரை நிகழ்த்தினார். திருச்சியில் உள்ள பல்வேறு அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த பொறுப்பாளர்கள் இந்த நிகழ்வில் ஆர்வத்துடன் பங்கேற்றது, வக்ஃப் குறித்த புரிதலை மேம்படுத்தவும், சமூக நல்லிணக்கத்தை வளர்க்கவும் ஒரு நம்பிக்கையான முன்னெடுப்பாக அமைந்தது. அவர்களின் பங்களிப்பு எதிர்காலத்தில் மேலும் பயனுள்ள ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கை துளிர்விடுகிறது.

நிகழ்ச்சியின் இறுதியில் கலந்துகொண்ட அனைவருக்கும் IFT வெளியிட்டுள்ள வக்ஃப் திருத்தச்சட்டம் ஒரு விரிவான பார்வை என்ற புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) திருச்சி கிளையின் விரிவாக்கப் பொறுப்பாளர் ஜனாப் சிராஜூதீன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவெறும்பூர் வட்ட ஊழியர்கள்இந்த நிகழ்வைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# அல்லாஹ்வின் உதவியாளராக திகழுங்கள்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளையின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட அபிமானிகளுக்கான நிகழ்ச்சி மதரஸா தாருஸ்ஸலாமில் 26.05.2025 திங்கட்கிழமை மாலை 6.30 மணி முதல் 9.00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. நகர தலைவர் ஜனாப் சிபகத்துல்லாஹ் தலைமை வகித்தார். சகோ: சாஜித் அஹ்மத் இறைவசனம் ஓதினார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் புதுச்சேரி மண்டல அமைப்பாளர் ஜனாப் அப்துல் ஹமீத் அவர்கள் முஸ்லிம் அடிப்படை கடமை எனும் தலைப்பிலும். டாக்டர். முஹைதீன் அவர்கள் கூட்டமைப்பின் அவசியம் ஏன் என்ற தலைப்பிலும் மிகச் சிறப்பாக உரையாற்றினார்கள். இறுதியாக சகோ இப்ராஹீம் நன்றி கூறினார். நிகழ்ச்சியை சகோ. முஹம்மத் மாஸ் வழிநடத்தினார். இறுதியாக இஷா தொழுகைக்கு பிறகு



அனைவருக்கும் உணவு பரிமாறபட்டது. ஜமாத் உறுப்பினர் மற்றும் ஊழியர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

# இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி

31.5.2025 சனிக்கிழமை காலை 10:30 முதல் 12:30 வரை விருதுநகர் கிளை சார்பாக இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக டாக்டர், கே வி எஸ் ஹபீப் முஹம்மது அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மேலும், jih மண்டல அமைப்பாளர் ஜனாப்; நஜீர் ஹுஸைன் அவர்களும் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்கு விருதுநகர் கிளை தலைவர் ஜனாப்: சாகுல் ஹமீது அவர்கள் தலைமையேற்று நடத்தி தந்தார்கள் மேலும், சின்ன பள்ளிவாசல் தலைவர் மற்றும் விருதுநகர் jih கிளை உறுப்பினர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டனர். இந்த இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சியில் இஸ்லாமிக் சென்டர் வட்டத்தின் சார்பாகவும்



★ ஊராம்பட்டி
★ சொக்கநாதன் பட்டி
★ குராயூர்

பகுதியில் இருந்து நமது உறுப்பினர், மற்றும் ஊழியர்கள் தலைமையில் இளைஞர்கள் அழைக்கப்பட்டு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# குழந்தைகள் பாதுகாப்பு தினம்

ஜூன் 4 ம் தேதி “ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளின் பாதுகாப்பு தினம்” அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது ஒவ்வொரு முக்கிய நாட்களிலும் இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக தொடர்ந்து நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் ஜூன் 4-ஆம் தேதி குழந்தைகள் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த தினத்தில் குழந்தைகளை சந்தித்து கலந்துரையாடல்கள் செய்வது, இனிப்புகள் வழங்குவது அவர்களுக்கான அறிவுரை புகட்டுவது போன்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பள்ளிக்கூடங்களுக்கு சென்று தலைமை ஆசிரியர்களை சந்தித்து குழந்தைகள் பாதுகாப்பு தினத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் அவர்களிடத்தில் எடுத்து கூறி அனுமதி கிடைத்தால் அனைத்து பள்ளி மாணவ - மாணவிகள் அமர வைத்து அவர்களுக்கான சிறிய வழிகாட்டுதல் வழங்குவதும் நடந்து வருகிறது. பெற்றோர்களை சந்தித்து குழந்தைகளுடைய வளர்ப்பை குறித்தும் குழந்தையினுடைய எதிர்காலத்தை குறித்தும் பாதுகாப்பையும் குறித்தும் பேசப்பட்டு வருகின்றனர். இந்த ஆண்டும் ஜூன் 4-ம் தேதி குழந்தைகள் பாதுகாப்பு தினம் நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு சிறப்பாக நடந்தன.




அவ்வகையில் கோடாங்கிபட்டி அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளை

சந்தித்து கலந்துரையாடல் நடத்தப்பட்டது தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களிடம் உரையாடல் செய்யப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன. குராயூர் பகுதியில் பள்ளிக்கூடத்துக்கு சென்று மாணவ மாணவிகளை சந்தித்து உரையாடலும் நடத்தப்பட்டது இனிப்புகள் வழங்கப்பட்டன மக்கா நகரில் பள்ளிக்கூட மாணவ மாணவிகளை சந்தித்து இனிப்புகள் வழங்கி இந்த நாளின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறப்பட்டது. மற்ற பகுதிகளிலும் இப்பணி சிறப்பாக நடைபெற்றது.

# வாழ்த்துச் செய்தி

நபி இப்ராஹீம்(அலை) வாழ்வுக்குத் திரும்புங்கள்....
ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் வாழ்த்துச் செய்தி

ஹஜ்ஜுப் பெருநாளின் அடிநாதமாக இருப்பது ஏகத்துவம். அந்த ஏகத்துவத்தை நிலைநாட்டும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளுதல். கொள்கைக்காக எத்தகைய தியாகத்தையும் செய்ய முன்வருதல். இதுதான் ஹஜ்ஜுப் பெருநாளின் மகத்தான செய்தி.

நபி இப்ராஹீம்(அலை) அவர்கள்தாம் ஹஜ்ஜின் நாயகர். படைக்கப்பட்ட அனைத்தையும் ஆய்வு செய்கின்ற மனிதன் படைத்தவனைக் குறித்து ஆய்வு செய்வதில்லை. ஆனால் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் படைத்தவனைக் குறித்து சிந்தித்தார்கள். ஒரே இறைவனின் பக்கம் திரும்பினார்கள். அதில் இறுதி மூச்சு வரை நிலைத்து நின்றார்கள்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் தாம் உணர்ந்த ஏகத்துவப் பேரொளியில் நடைபோட்டதுடன் அன்று சமூகத்தில் நிலவிய அறியாமை இருள் அகற்ற முயன்றார்கள். அன்றைய காலத்தில் மக்கள் படைப்புகளையும், சூரியன், சந்திரன், நட்சத்திரத்தையும் வணங்கிக் கொண்டிருந்தனர். அவர்களிம் ஓரிறைச் செய்தியை எடுத்துரைத்தார்கள். அப்படிச் சொல்லும் போது ஏற்பட்ட அத்தனை நெருக்கடிகளையும் எதிர்கொண்டு எல்லா தியாகத்திற்கும் தம்மை ஆட்படுத்திக்கொண்டார்கள்.

தாம் மட்டுமின்றி தம்முடைய மனைவி, மக்களையும் அத்தியாகத்திற்கு உட்படுத்தினார்கள். ஏகத்துவ இலட்சியக் குடும்பமான இப்ராஹீம்(அலை) அவர்களின் குடும்பத்தினர் செய்த தியாகங்களை இந்தப் பெருநாளில் நாம் நினைவு கூர்வதால்தான் இதனை தியாகத் திருநாள் என்று அழைக்கின்றோம். எந்த தியாகத்தை நாம் நினைவு கூர்கின்றோமோ அதன் அடிப்படையில் நம் வாழ்வையும், நம் குடும்பத்தினரின் வாழ்வையும் அமைத்துக் கொள்ள முன்வர இந்த இந்தப் பெருநாளில் நாம் உறுதி ஏற்க வேண்டும்.

சகோதரச் சமுதாயச் சொந்தங்களுக்கும் பகுத்தறிவுப் பகலவர் நபி இப்ராஹீம்(அலை) அவர்களின் பெருவாழ்வைக் குறித்து எடுத்துச் சொல்லும் நல் வாய்ப்பாக இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக எத்தகைய தியாகத்தையும் செய்வோமே தவிர கொள்கைச் சமரசமில்லை என்று இன்றளவும் போராடிக் கொண்டிருக்கும் ஃபலஸ்தீன முஸ்லிம்களையும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த பூமியில் அமைதி திரும்ப வேண்டும்.

குழந்தைகளைக் கூட ஈவு இரக்கமில்லாமல் கொன்றழிக்கும் கொடூரம் நிறுத்தப்பட வேண்டும். அவர்களுக்காகவும் நாம் பிரார்த்திக்க வேண்டும்.

இன்றைய சூழலில் நபி இப்ராஹீம்(அலை) அவர்களின் வாழ்விலிருந்து நாம் பாடமும், படிப்பினையும் பெற வேண்டும். நபி இப்ராஹீம்(அலை) அவர்களின் வாழ்விற்குத் திரும்புவோம். அனைவருக்கும் தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துகள்.

**“ஈத் முபாரக்”**

மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ
மாநிலத் தலைவர்,
ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்,
தமிழ்நாடு & புதுச்சேரி.




# கடையநல்லூர் தியாகத் திருநாள் சந்திப்பு புத்தக வெளியீடு

14/12/1446 (11/06/2025) புதன்கிழமை மாலை 4 மணி கடையநல்லூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிளை, இஸ்லாமிய இலக்கிய கழகம் இணைந்து தியாகத் திருநாள் சந்திப்பு, வக்ஃபு திருத்தச் சட்டம் ஒரு பார்வை:நூல் அறிமுகம், ஹஜ்ஜின் நாயகர்: நூல் வெளியீடு என முப்பெரும் நிகழ்ச்சி கடையநல்லூர் ரியாளுஸ் ஸாலிஹாத் மகளிர் அரபிக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வின் துவக்கமாக மௌலவி சம்சுதீன் ஃபைஜி திருமறை வசனங்கள் ஓதினார்கள். இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் செயலாளர் நல்லாசிரியர் செய்யது மசூது அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். JIH கிளைத் தலைவர் பீர் முஹம்மது அவர்கள் துவக்கவரை நிகழ்த்தினார். சென்னை கீழக்கரை புகாரி ஆலிம் அரபிக் கல்லூரி முதல்வர் PS செய்யது மசூது ஜமாலி மற்றும் இஸ்லாமிய இலக்கிய கழகத் தலைவர் எழுத்தாளர் சேயன் இப்ராஹீம் சிறப்புரை நிகழ்த்தினார்கள். பின்பு நூல்கள் வெளியிடப்பட்டது. சமரசம் இதழ் பொறுப்பாசிரியர் வி எஸ் முஹம்மது அமீன் ஏற்புரை வழங்கினார்கள். நிகழ்ச்சியை JIH ஊழியர்கள் ஜனாப் முஹம்மது ரிழ்வான் வழி நடத்தினார். ஆண்கள் பெண்கள் சுமார் 140 பேர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் தேநீர் சுவீட் பாக்ஸ் வழங்கப்பட்டது.



# தியாக பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி - கடலூர்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் - கடலூர் சார்பாக தியாக பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி 14-06-25 அன்று நடைபெற்றது, நிகழ்ச்சிக்கு கடலூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளர் சகோ. M. அப்துல் ஹமீது தலைமை தாங்கினார், கடலூர் இஸ்லாமிய கூட்டமைப்பு தலைவர் சகோ. I. அஸ்மா நஸ்ருத்தீன் முன்னிலை வகித்தார்,




நிகழ்ச்சியின் தொடக்கமாக மௌலவி. அப்துல்லாஹ் ஸலாமி அவர்கள் கிராத் ஓதினார்கள், அதனை தொடர்ந்து வட்ட பொறுப்பாளர் சகோ. J நிசார் அஹ்மத் அனைவரையும் வரவேற்றார், மஞ்சை நகர் அனைத்து வியாபார சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் Rtn. MPHF.PP திரு சபா ஆனந்த குமார் அவர்கள் சிறப்பான முறையில் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து புதுச்சேரி தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் நா. இளங்கோ மிக சிறப்பான முறையில் இஸ்லாமிய சிறப்பு அம்சங்கள், சமூக நல்லிணக்கம் குறித்தும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதித்த, வாழ்ந்து காட்டிய வாழ்வியல் முறைகள் குறித்தும், மேலும் இன்று நாட்டில் நடைபெறும் அநீதிகள் குறித்தும் மற்றும் மத நல்லிணக்கத்தின் தேவைகள் குறித்தும் மிக சிறப்பாக உரையாற்றினார்கள்,



இதனை தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர் சமரசம் இதழ் பொறுப்பாசிரியர் சகோ. V S அமீன் அவர்கள் நிகழ்ச்சியின் நோக்கம் குறித்தும், தியாக பெருநாள் தருகின்ற செய்தி குறித்தும், சமூகத்தில் சமீபகாலங்களில் நடைபெறும் அநீதிகள் குறித்தும் சிறப்புரை ஆற்றினார்கள், அதற்கான இஸ்லாமிய தீர்வுகள், இறைதூதர் இப்ராஹிம் (அலை) அவர்கள் வாழ்விலிருந்து நாம் பெறவேண்டிய படிப்பினைகள் குறித்தும் மிக விளக்கமாக உரையாற்றினார்கள், இறுதியாக சகோ. மாலிக் பாஷா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

நிகழ்ச்சியில் கடலூரை சார்ந்த சகோதர சமுதாய மக்கள் நூற்றுக்கும் மேற்ப்பட்ட ஆண்கள் பெண்கள் திரளாக கலந்து கொண்டனர், நிகழ்ச்சி ஏற்பாடுகளை கடலூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஹஜ் பெருநாள் சந்திப்பு:

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், பாலக்கரை வட்டத்தின் சார்பில் ஹஜ் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி 15.06.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 7 மணியளவில் திருச்சி முதலியார்சத்திரம் KMS ஹக்கீம் அரங்கில் நடைபெற்றது.



துவக்கமாக, இறைமறை வசனங்களை அஸ்ஸலாம் கல்லூரி மாணவர் முஹம்மது இம்ரான் ஓதினார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், திருச்சி கிளைத் தலைவர் முனைவர். ஹஜ் மொய்தீன் துவக்கவுரை நிகழ்த்தினார். கல்லுக்குழி புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை மற்றும் புனித ஜான்பால் உரையாடல் மன்ற இயக்குநர் அருட்பணி முனைவர். க.சார்லஸ் அவர்களுக்கும், திருச்சி நாகப்பா கார்ப்பரேஷன் உரிமையாளர் திருமிகு. நாகப்பா லெட்சுமணன் அவர்களுக்கும் 'சமய நல்லிணக்க விருது' வழங்கி கவுரவிக்கப்பட்டது. விருதுகளைப் பெற்ற இருவரும் தங்களது சமய நல்லிணக்க அனுபத்தை பகிர்ந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். திருச்சி மாவட்ட பைத்துல்மால் அறக்கட்டளை தலைவர் டாக்டர் ச. சாகுல் ஹமீது சமுதாயத்தில் நடைமுறையிலிருக்கும் பழக்கவழங்களைச் சுட்டிக்காட்டி விளக்கமளித்தார்.



சமரசம் இதழின் பொறுப்பாசிரியர் ஜனாப். வி. எஸ். முஹம்மது அமீன் அவர்கள் 'ஹஜ் பெருநாள்' சிறப்புரையாற்றினார். அவர் தம் உரையில், 'ஹஜ் பெருநாள்' கொண்டாடுவதன் காரணத்தையும், நபி இப்ராஹீம் அவர்களின் முற்போக்குச் சிந்தனைகளையும் தெளிவாக விளக்கினார். மேலும், தற்காலத்தில் அமைதியை சீர்கெடுக்கும் காரணிகளையும், சிறுபான்மையினர் சந்திக்கும் சிக்கல்களையும், அதற்கான தீர்வுகளையும், பரஸ்பர புரிதலுக்கான அவசியத்தையும், தமிழகத்தின் சமூக நல்லிணக்கத்தின் சிறப்புகளையும் எடுத்துக் கூறினார்.

இறுதியாக, சகோ. அ. உமர் பாரூக் அனைவருக்கும் நன்றிக் கூறினார். சகோ. அஜ்மல் கான் மற்றும் சகோ. தவ்ஃபிக் நிகழ்வை சிறப்பாக தொகுத்து வழங்கினர். கல்வியாளர்கள், அதிகாரிகள், ஊடகத்தினர், வணிகர்கள், ஊழியர்கள் என பல சமயங்களைச் சேர்ந்த சகோதர சகோதரிகள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். ரிஃபா சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் ஜனாப். காஜா மொய்தீன் மற்றும் ஜனாப். பாரத் ஷாஜஹான் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் 'ஹஜ்ஜின் நாயகர்' நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன் சுவையான இரவு உணவும் பரிமாறப்பட்டது.



பாலக்கரை வட்ட ஊழியர்கள் ஏற்பாடுகளை வெகுச் சிறப்பாக செய்திருந்தனர்.

## சிறப்பு கூட்டம்:



தஞ்சாவூர் JIH Volunteers & சாலிடாரிட்டி உறுப்பினர்களுக்கான சிறப்பு கூட்டம் செவ்வாய்க்கிழமை 17-Jun-2025 மாலை நடைபெற்றது , இக்கூட்டத்தில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் தன்னார்வளர்களும் , சாலிடாரிட்டி உறுப்பினர்களும் கலந்துக்கொண்டனர், அல்ஹம்துலில்லாஹ். சகோ. ஹாஜி அவர்கள் குர்ஆன் வசனங்களை ஓதி துவக்கிவைத்தார். அதனைத் தொடர்ந்து, சாலிடாரிட்டி தமிழ்நாடு மாநில தலைவர் சகோ. முகமது ரியாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில அமைப்புச்செயலாளர் K. ஜலாலுதீன் அவர்கள் கலந்துக்கொண்டு இஸ்லாத்தை எடுத்துரைப்பது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை மற்றும் கூட்டாக இருப்பதன் முக்கியத்தவம் பற்றி உரையாற்றினார். பின்னர் சகோ. பஹிம் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

## SIO மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி:

கடந்த 22:6: 2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணி முதல் இரவு 7:00 மணி வரை நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்சி இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு ( SIO) சார்பாக சிறப்பு நிகழ்ச்சிக்காக சகோ ; அப்துல் அஜீஸ் தலைமையில் அணைக்கரைப்பட்டிக்கு வருகை புரிந்தனர். வருகை புரிந்த மாணவர்களை வரவேற்று நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலச் செயலாளரும், மதுரை இஸ்லாமிக் சென்டர் செயலாளருமான மௌலானா முகைதீன் குட்டி அவர்கள் மேற்பார்வையாளராக இருந்தார்.



மேலும், இந்நிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும், மதுரை இஸ்லாமிக் சென்டர் துணைச் செயலாளருமான ஜனாப் : கா. நஜீர் ஹுஸைன் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார்.

வருகை புரிந்த மாணவர்களுக்கு ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர் மற்றும் ஊழியர்கள் இமாம் சர்தார் பாஷா ஆலிம் ; சேக் முஹம்மது- தாஃவதி மௌலவி; அப்துல் மாலிக் - ஸலாமி ஆகியோர் வழிகாட்டியாக இருந்து மிகச் சிறப்பாக நிகழ்ச்சியை

அமைத்துக் கொடுத்தார்கள். இச்சிறப்பு நிகழ்ச்சியில் மாணவர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது . வருகை புரிந்த அனைவருக்கும் நிகழ்ச்சியின் மூலம் அனுபவங்கள் மற்றும் தாக்கங்களை பகிர்ந்து கொண்டார்கள். தங்களுடைய வாழ்வில் இப்படி ஒரு அனுபவம் எங்களுக்கு கிடைத்ததில்லை, நாங்கள் வேறு வகையாக நினைத்து வந்தோம் எங்களுக்கு இங்கு மிகச்சிறப்பாக நிகழ்ச்சி அமைந்தது. வழிகாட்டியாக வந்தவர்களும் எங்களுக்கு நல்லதொரு பயிற்சியாளராக திகழ்ந்தார்கள். பல அனுபவங்கள் எங்களுக்கு கிடைத்தது. என்பது போன்ற அனுபவங்களை நிகழ்ச்சியின் இறுதியில் வருகை புரிந்த மாணவர்கள் தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். மிகச் சிறப்பான நிலையில் இந்நிகழ்ச்சி நடந்து நிறைவடைந்தது அல்ஹம்துலில்லாஹ்.

# NIA வின் பொய் வழக்குகள், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக கோவை மாவட்ட இஸ்லாமிய இயக்கங்கள் கூட்டமைப்பு - பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு !

NIA வின் பொய் வழக்குகள், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக கோவை மாவட்ட அனைத்து ஜமாஅத்கள், இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு சார்பாக பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு இன்று (24 ஜூன் 2025) நடைபெற்றது.

இந்த சந்திப்பில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஜமாஅத்கள், இஸ்லாமிய இயக்கங்களின் தலைவர்கள், அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.




மேலும் NIA வால் பொய் வழக்குகளால் கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் அப்பாவி இளைஞர்களின் குடும்பத்தினரும், இப்பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு தங்களது வாழ்வில் நடைபெற்று வரும் இன்னல்களை கண்ணீரோடு பகிர்ந்தனர்.

இந்தியாவில் தமிழகம் அனைத்து தளங்களிலும் முன்னேறி வருகிறது. குறிப்பாக, கோவை மாவட்டம் அமைதியாக சிறப்பான பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகிறது. அதன் அமைதியை, வளர்ச்சியை குலைக்க வேண்டும், வரும் முதலீடுகளில் இடையூரு செய்யவேண்டும் என்கிற உள்நோக்கத்துடன் இந்து பெறும்பான்மைவாத சக்திகள் செயலாற்றிவருகிறது.

அதன் தொடர்ச்சியாகத்தான், அமைதிக்கு எடுத்துகாட்டாய் திகழும் கோவை மாவட்டத்தை பயங்கரவாதிகளின் புகலிடம், தீவிரவாதிகளின் கூடாரம் என்கிற பொய் பிரச்சாரம். இப்பொய் பிரச்சாரத்திறக்கு மறைமுகமாக உதவிகளை செய்து வருகிறது

தேசிய புலனாய்வு முகமை (NIA).




மதசார்பற்ற கட்சிகளின் ஆட்சிகாலத்தில் திறமையாக, நீதியாக, சுதந்திரமாக செயலாற்றி வந்த NIA, தற்போது பாசிச கொள்கைகளை அமுல்படுத்தும் பா.ஜ.க வின் அதிகாரிகள் பிரிவு அணியாக செயலாற்றி வருகிறதோ என எண்ணத்தோன்றும் அளவுக்கு செயல்படுகிறது.

தொடர்ச்சியாக தமிழகத்தில், அதிலும் குறிப்பாக கோவையில் சோதனை என்கிற பெயரில் இஸ்லாமியர்களை தீவீரவாதிகளாக சித்தரித்து செய்திகளை வெளியிடுவது, பொய் வழக்குகளை உண்மைபடுத்த பொய்சாட்சி சொல்லவதற்கும் அப்ரூவர் ஆகிடவும் மிரட்டுவது, ஒத்துழைக்கவில்லையென்றால் பொய் வழக்கு போடுவது, வழக்கு விசாரணைகளை வேண்டுமென்றே நீதிமன்றங்களில் தாமதபடுத்துவது, பாதிக்கபடும் குடும்பதினர்கள் - உறவினர்களை விசாரணையின் பெயரால் அலைகழிப்பது, வழக்கு நடத்த உதவும் தன்னார்வர்களை கண்காணிப்பு எனும் பெயரில் முடக்குவது போன்ற மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவது என தொடர்ச்சியாக இஸ்லாமிய விரோத எண்ணத்துடன் NIA செயலாற்றி வருவது கண்டணத்திற்குரியது.

மக்களின் வரிபணத்தில் ஊதியம் பெறும் NIA அதிகாரிகள் மக்களின் அமைதிக்காக, நாட்டின் நன்மைக்காக பணியாற்றவேண்டுமே தவிர, பா.ஜ.க-வின் கொள்கைகளை நடைமுறைபடுத்த செயலாற்ற கூடாது.

‘15 நாளில் அரபி கற்றுத்தரப்படும்’ என நடத்தபடும் மொழி கற்பிப்பு மையத்தில் அரபி மொழி கற்ற ஒரு நபர் தவறு செய்தார் என்ற குற்றசாட்டினை காரணமாகக் காட்டி, 7 ஆண்டுகள் தொடங்கி 10 ஆண்டுகள் வரை இஸ்லாமியர்களின் புனித குர்ஆன் மனனம், கலாச்சாரம், மார்க்கநெறிகள் மற்றும் உலகக் கல்விகளை சான்றிதழுடன் கற்றுக்கொடுக்கும் நூற்றாண்டுகளைக் கடந்த இஸ்லாமிய குருகுலங்களான மதரசாக்களை, அரபிக்கல்லூரிகளை தொடர்புபடுத்தி களங்கப்படுத்தும் கருத்துருவங்களை ஏற்படுத்துவது கடும் கண்டணத்திற்குரியதாகும்.தமிழக அரசும், மதசார்பற்ற கட்சிகளும் நாட்டுநலன் கருதி இப்பிரச்சினையில் மவுனம் கலைக்கவேண்டும்.

இதில் இருக்கும் தவறான உள்நோக்கங்களை கொண்ட NIA-வின் செயல்பாடுகளை கேள்விக்குள்ளாக்க வேண்டும், சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் கோவை இஸ்லாமிய கூட்டமைப்பு கேட்டுக் கொள்கிறது.

## போதை ஒழிப்பு பிரச்சாரம்:

மக்கள் கருத்தை இஸ்லாத்திற்கு சாதகமாக மாற்றி அமைக்கும் பணிகளில் இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக ஒரு அம்சத்தில் பணிகளை முடிவு செய்து மாதந்தோறும் மக்கள் கருத்தை மாற்றி அமைக்கக்கூடிய பணிகளை முன்னெடுத்து வரப்படுகிறது. அவ்வகையில் ஜூன் மாதம் 26 ஆம் தேதி போதை ஒழிப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. தற்போது நாட்டில் நிலவக்கூடிய போதை மற்றும்

மது சார்ந்த பல தீமைகள் இன்றைக்கு உலகெங்கும் மலிந்து கிடப்பதை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் போதை சம்பந்தமான பல்வேறு நிலைகளை அவர்கள் பயன்படுத்துவதும் அதற்கு அடிமையாகி வாழ்வை இழந்து படுகுழியில் விழ்ந்து கொண்டிருப்பதை பார்க்க முடிகின்றது.



இச்சூல் நிலையில் ஜூன் 26 ஆம் தேதி போதை ஒழிப்பு தினத்தை மையமாக வைத்து பல்வேறு பகுதிகளில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துவது என இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக முடிவெடுக்கப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக கடந்த 24.6.2025 செவ்வாய்க்கிழமை மாலை தெருமுனைப் பிரச்சாரம் இராமநாதபுரம் மாவட்டம், சிக்கல் பகுதியில் உள்ள மதினா நகரில் மாலை 5:30 மணி அளவில்  நடைபெற்றது.

இதில் மறவாய்க்குடி ஜும்ஆ பள்ளிவாசல்  இமாம் ஷேக் முஹம்மது ஆலிம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மதினா நகரில் உள்ள மக்கள் ஆண்கள் பெண்கள் இளைஞர்கள் என மொத்தம் 55 நபர்களுக்கு மேல் கலந்து கொண்டனர்.

# ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர் வட்டத்தின் புதிய அலுவலகம்:

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர் வட்டத்தின் புதிய அலுவலகம் இராமநாதபுரம் மாவட்டம் சிக்கல் பகுதியில் இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டத்தின் சார்பாக சிக்கல் பகுதியில் உள்ள உறுப்பினர் ஊழியர்களை ஒருங்கிணைக்கும் வகையில் சிக்கலில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர் வட்டம் சார்பாக புதிய அலுவலகம் சிக்கல் பேருந்து நிலையத்தின் அருகில் திறக்கப்பட்டது. சிக்கல் பகுதியை சுற்றி இருக்கக்கூடிய நான்கு ஊர்களை இணைக்கும் வகையில் மறவாய்க்குடி, மதீனா நகர், ஓடைக்குளம் கோட்டை யேந்தல் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் மையமாக இந்த அலுவலகம் செயல்படும்.

இதுவரை வாரந்தோறும் ஒவ்வொரு பகுதிகளும் வகுப்புகள் நடைபெற்று வந்தது.
இனி வரக்கூடிய காலங்களில் சிக்கல் பகுதியில் அமைந்துள்ள இந்த அலுவலகத்தில் அனைத்து பணிகளும் நடைபெறும். அலுவலகத்தின் முதல் நிகழ்ச்சியில் நான்கு பகுதி மக்கள்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# ஜெய்வாபாய் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முப்பெரும் விழா:



திருப்பூர் ஜெய்வாபாய் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முப்பெரும் விழா கடந்த 19.06.2025 காலை 10 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் மணிப்பால் ஸ்டோர் உரிமையாளர் அவர்கள் மாணவிகளின் உயர்கல்விக்காக 25 மாணவிகளுக்கு ரூபாய் பத்தாயிரம் வீதம் நன்கொடை வழங்கினார்கள். மேலும் 12 ஆம் வகுப்பில் பொதுத் தேர்வில் முதல் இரண்டாம் மூன்றாம் இடம் பிடித்த மாணவிகளுக்கு பரிசுத்தொகை வழங்கினார்கள். மேலும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மிகச் சிறப்பாக மாணவிகளின் கல்விக்காக சேவையாற்றி வருகிறீர்கள் என்று வாழ்த்தி அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தினார்கள். இந் நிகழ்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பூர் உறுப்பினர் ஷகிலா பானு அவர்களுக்கும் மணிபால் ஸ்டோர் உரிமையாளர்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர் என்ற வகையில் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார்கள். இந்நிகழ்வு மிகச் சிறந்த நிகழ்வாக அமைந்திருந்தது.

# தேசியக் கருத்தரங்கம்:

“கல்வி கொள்கைகளில் சமீபத்திய போக்குகள் (Recent Trends in Education Policies)” என்கிற தலைப்பில் ஒரு தேசியக் கருத்தரங்கம் ஜூன் 15, 2025 அன்று சென்னை பெரம்பூர் ஜமாலியாவில் உள்ள ICC அரங்கத்தில் நடைபெற்றது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு கிளையின் கல்வித் துறையுடன் இணைந்து அகில இந்திய முன்மாதிரி ஆசிரியர் சங்கம் (AIITA) தமிழ்நாடு கிளை இக்கருத்தரங்கை வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தது.

தேசிய கல்விக் கொள்கை (NEP) குறித்த சிறப்பு விவாதங்களையும், வளர்ந்து வரும் இந்தியாவில் இதுவரையான கல்விக் கொள்கைகளை விமர்சன ரீதியாக ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டு இக்கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் நாடு முழுவதிலுமிருந்து கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், தாளாளர்கள் என 44 பிரதிநிதிகள் பங்கேற்றனர். காலை 9:50 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 1:50 மணிக்கு நிறைவடைந்த இந்நிகழ்விற்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்-ன் தமிழகத் துணைத் தலைவர் I. அஹ்மத் ஜலாலுத்தீன் அவர்கள் தலைமை தாங்கினார். கல்விக்கொள்கைகள் குறித்த பழுத்த அனுபவம் நிறைந்த பின்வரும் அறிஞர் பெருமக்கள் தங்களது ஆய்வுரைகளை வழங்கினர்:




டாக்டர் ஜஸிம் அஹ்மத், பேராசிரியர், ஜாமியா மில்லியா இஸ்லாமியா, புது தில்லி.
டாக்டர் யேரம் கான், இணைப் பேராசிரியர், ஜாமியா மில்லியா இஸ்லாமியா, புது தில்லி. சகோ. V. ஃபஹ்ருத்தீன் அலி அஹ்மத், கல்விக்குழு உறுப்பினர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தமிழ்நாடு & தாளாளர், அன்னை ஆயிஷா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர், தமிழ்நாடு. திருமதி ஷைமா S, துணை ஆசிரியர், ஆரா மின்னிதழ். டாக்டர் சதத் ஹுசைன், கல்விக் கொள்கை மற்றும் பொருளாதார ஆராய்ச்சியாளர். திரு. M.D. ஃபரித், உறுப்பினர், தாலிமி வாரியம், புது தில்லி.

மேற்கண்ட ஒவ்வொரு ஆய்வறிஞர்களும் இந்தியக் கல்விக் கொள்கைகளின் வரலாறு, கல்விக் கொள்கைகளின் சமூக மற்றும் உலகளாவிய போக்குகள், புதிய கல்விக் கொள்கை ஏற்படுத்தியுள்ள சமூக தாக்கங்கள், கல்விக்கொள்கை விவகாரங்களில் இனி கவனம் செலுத்தப்பட வேண்டிய புள்ளிகள் ஆகிய களங்களில் சிறப்பான ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்தனர். புதிய கல்விக் கொள்கை மீதான மாநில அரசுகளின் எதிர்வினைகள் மற்றும் குடிமைச் சமூகத்தின் பொறுப்புகள் பற்றிய விவாதங்களுடன் திறந்த கலந்துரையாடல் அமர்வு இறுதியாக நடைபெற்றது. முனைவர் M. சலாஹுதீன், தமிழகத் தலைவர், அகில இந்திய முன்மாதிரி ஆசிரியர் சங்கம் (AIITA) அவர்களின் நன்றியுரையுடன் கருத்தரங்கு இனிதே நிறைவடைந்தது. பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் தேநீர் மற்றும் மதிய உணவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இக்கருத்தரங்கின் முழு நிகழ்வுகளின் ஆய்வறிக்கைகளும் புத்தகமாக தொகுக்கப்பட்டு விரைவில் வெளியிடப்பட உள்ளது.

இக்கருத்தரங்கின் உள்ளடக்கம், அமைப்பு மற்றும் தற்போதைய கல்விக் கொள்கை, அது பயணிக்க வேண்டிய பாதை, கல்வித்துறையில் ஏற்பட வேண்டிய முன்னேற்றங்கள் என பல அம்சங்கள் குறித்தும் அக்கறையோடு விவாதித்த இக்கருத்தரங்கம் தேவையான நேரத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நல்ல நிகழ்வு என்பதாக நல்ல வரவேற்பைப் பெற்றது. கருத்தரங்கை நடத்துவதற்கு பங்களித்த அனைத்து ஆய்வறிஞர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கும் ஏற்பாட்டாளர்கள் தம் நன்றிகளையும் மறவாமல் தெரிவித்தனர்.

# ஹஜ்ஜுப் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி:

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், கோவை பெருநகரம் கீழ் இயங்கி வரும் அரிசிபாளையம் மஸ்ஜித் அன்நூர் பள்ளிவாசலின் ஏற்பாட்டில், ஹஜ்ஜுப் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி இன்று (22 ஜூன் 2025) வெகுசிறப்பாக நடைபெற்றது.




“இதயங்களை இணைக்கும் ஹஜ்ஜுப் பெருநாள்” என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சகோதர சமுதாயத்தை ஒருமைப்படுத்தும் முயற்சியாக மதநல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் உரைகள் இடம் பெற்றன.

நிகழ்வின் தொடக்கமாக, சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு அரிசிபாளையம் மொஹல்லா பொறுப்பாளர் சகோ. ஹிஷாம் அவர்கள் இறைவசனங்களை ஓதினார்கள்.

அதனைத் தொடர்ந்து, முன்னாள் பல்லடம் அரசு மருத்துவமனை தலைமை அதிகாரி Dr. நஸீருதீன் சாஹிப் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். நிகழ்வில் அரிசிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் திரு. கணேசன் மற்றும் ஒத்தகால் மண்டபம் கிறிஸ்தவ கத்தோலிக்கத் திருச்சபையின் திருத்தந்தை ஜாய் ஜெய்ஸீலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



அதன் பின், “சமரசம்” இதழ் ஆசிரியர் ஜனாப் V.S. அமீன் சாஹிப் அவர்கள் சிறப்புரையாற்றினார். “தியாகம், ஈகை மற்றும் சகோதரத்துவத்தை உணர்த்தும் ஹஜ்ஜுப் பெருநாள்” என்ற கருத்தை மையமாகக் கொண்டு, மத இடைவெளிகளை நீக்கும் நிகழ்வுகளின் அவசியத்தை உணர்த்தினார்.

அதனைத் தொடர்ந்து, நிகழ்வில் கலந்துகொண்ட சகோதர சமுதாயத்தினருடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் முடிவில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், கோவை பெருநகரத் தலைவர் ஜனாப் P. S. உமர் ஃபாரூக் சாஹிப் அவர்கள் நிறைவுரை வழங்கினார்கள். நிகழ்வினை மஸ்ஜித் அன்நூர் பள்ளிவாசல் தலைவர் ஜனாப். கிஸர் ஒமர் அவர்கள் வழிநடத்தினார்கள்.

இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட சகோதர சமுதாயத்தினர் ஆர்வமுடன் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

# சிறப்பு நிகழ்ச்சி:



உடுமலை கிளை மகளிர் அணி சார்பில் 24.06.2025 (செவ்வாய் கிழமை ) ஜமாத் ஆதரவாளர்களுக்கான (பெண்கள்) சிறப்பு கூட்டம் நடைபெற்றது.
அல்ஹம்துலில்லாஹ் இந்த கூட்டத்திற்கு மகளிர் அணி பொறுப்பாளர் சகோதரி: A .மெஹராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். மண்டல அமைப்பாளர் ஜனாப்: S.A.K.ஜெய்லானி அவர்கள் மரணத்தை நினைவு கூறுவோம் என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

இதில் 22 பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கலந்து கொண்ட பெண்களிடம் நாம் அனைவரும் சமூகத்தில் இஸ்லாத்திற்கு சான்று வழங்கும் வகையில் நமது வாழ்வியலை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தலுடன் நிகழ்வு நிறைவுற்றது.

தாக்கம்: கலந்து கொண்ட பெண்களில் 3 பேர் கூறினார்கள் உரை இன்றைய நடைமுறை வாழ்வியலோடு பேசியுள்ளார் என்றும் இஸ்லாத்தை வாழ்வியலாக மாற்ற வேண்டும் என்ற கருத்து எங்களை சிந்திக்க வைக்கிறது என்றும் வாரம் ஒரு முறை இது போன்ற நிகழ்வு நடத்த வேண்டுமாய் கேட்டுக் கொண்டனர்.

# போதை ஒழிப்பு பிரச்சாரம்:

போதை ஒழிப்பு பிரச்சார வாரத்தை முன்னிட்டு 26.6.2025 வியாழக்கிழமை மாலை 6:00 முதல் கோடாங்கி பட்டி பள்ளிவாசலில் முஸ்லிம்கள் மற்றும் சகோதர சமுதாய சொந்தங்களை அழைத்து போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக தேனி மாநகர ஜமாத்தின் தலைவர் ஜனாப் அபுதாஹிர் அவர்களும் மற்றும் தேனி சமூக நல்லிணக்க பேரவையின் தலைவர் ஜனாப் முஹமது சபி அவர்களும் கலந்து கொண்டனர். கோடாங்கி பட்டி ஜமாத் நிர்வாகிகள் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியின் துவக்கமாக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினறும்,கோடாங்கிபட்டி பள்ளிவாசல் இமாமுமானஆலிம் அபுபக்கர் தாஃவதி அவர்கள் தலைமையேற்று



நடத்தி தந்தார். மேலும்,கிராஅத் ஓதி அமர்வை தொடங்கி வைத்தார், தேனி அமீரே மகாமிஅபூதாஹிர் ராஜா அவர்கள்; மதுவின் தீமைகளை குறித்து பேசினார்கள். அதனைத் தொடர்ந்து தேனி சமூக நல்லிணக்க பேரவையின் தலைவர், ஜனாப்; முஹமது சபி போதை மறுவாழ்வு மையத்தை

குறித்து பேசினார். இதில் சகோதர சமுதாய சொந்தங்கள் மட்டும்14 நபர்கள் கலந்து கொன்டார்கள். மேலும் முஸ்லிம் ஜமாத்தார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக நிகழ்வுக்கு வருகை புரிந்த அனைவருக்கும் விருந்தும், தேனீரும் வழங்கப்பட்டது.

## சிறப்பு ஆலோசனைக் கூட்டம்:

ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ மாநிலத்தின் உறுப்பினர்கள் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் 29 ஜூன் 2025, ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை IIC மையத்தில் சிறப்பாக நடைபெற்றது.



